**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் நாள் வியாழக்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு வருடம் ஸ்ரீபராபவ வருடம் ஆனி திங்கள் 04-ம் நாள்**

**CC. No.376 of 2025**

**(CNR No.TNVP10-1633-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.376/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ரோஷணை காவல் நிலையம்,<br>குற்ற எண்.562/2024,<br>பிரிவுகள் 112, BNS, 5, 7(3) Lottery Regulation Act |
| 3) | எதிரியின் விவரம் | : | சிவப்பிரகாஷ், வயது 30,<br>த/பெ ராதாகிருஷ்ணன்,<br>பாலாஜி நகர்,<br>சலவாதி கிராமம்,<br>மேல்பேட்டை அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம். |
| 3) | சம்பவ தேதி | : | 07.12.2024 |
| 4 | முறையீடு | : | ------ |
| 5 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | 07.12.2024 to 11.12.2024 = 5 days |
| 6 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 13.08.2025 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:33:41 +0530

| | | | |
|---|---|---|---|
| 7 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 06.06.2026 |
| 8 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- |
| 9 | சாட்சிகளின் விசாரணை | : | <table><tr><th>Witness</th><th>Date of Chief</th><th>Date of Cross</th></tr><tr><td>PW-1</td><td>12.06.2026</td><td>12.06.2026</td></tr><tr><td>PW-2</td><td>12.06.2026</td><td>12.06.2026</td></tr><tr><td>PW-3</td><td>12.06.2026</td><td>12.06.2026</td></tr></table> |
| 10) | கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 15.06.2026 |
| 11) | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை |
| 12) | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |
| 13) | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி பிரிவுகள் 112 BNS 5, 7(3) Lottery Regulation Act ன் கீழான குற்றச்சாட்டானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14) | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 13.08.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு,

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:33:47 +0530

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 12.06.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.மகேஷ்பாபு, B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

கடந்த 07.12.2024 ம தேதி மதியம் 12.00 மணிக்கு ரோஷணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சலவாதி கிராமம் பாலாஜி நகரில் கணிகாணித்து சென்றபோது எதிரியானவர் அவரது வீட்டின் அருகே நின்று கொண்டு தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுக்களை சட்ட விரோதமாக தொடர்ந்து குயில் என்று எழுதப்பட்ட லாட்டரி சீட்டுக்கள் -13, மயில் என்று எழுதப்பட்ட லாட்டரி சீட்டுக்கள் - 12 ஆகியவற்றை எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி வைத்து விற்பனை செய்து குற்றம் புரிந்ததாக எதிரியாகிய உம்மீது BNS பிரிவு 112(2) r/w 5 & 7(3) Lottery Regulation Act ன்படி ரோஷணை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது எதிரி மீது பிரிவுகள் 112 BNS r/w 5,7(3) Lottery Regulation Act ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:33:52 +0530

3) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230 BNSS - ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4)** வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது பிரிவுகள் 112(2) BNS r/w 5,7(3) Lottery Regulation Act ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் அ.சா.பொ.1, அ.சா.பொ.2 முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் முன்னிடப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

- ➔ கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1, அ.சா.2 ஆகியோர் சம்பவம் பற்றியும் தடய பொருளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளனர்.
- ➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.3 ரோந்து பணிக்கு சென்றது பற்றியும், எதிரியை கைது செய்து தடய பொருளை கைப்பற்றியது பற்றியும், வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:33:58 +0530

எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்ட எதிரி மீது பிரிவுகள் 112 BNS r/w 5,7(3) Lottery Regulation Act ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

**10)** அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன் வைக்கப்படவில்லை.

11. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் தனி நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. தடயப் பொருளான லாட்டரி சீட் பரிசு தொகை எந்த மாநிலத்தை சார்ந்தது என குறிப்பிடவில்லை. குழுவாக சேர்ந்து குற்றம் புரிந்ததாக வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மற்ற நபர்கள் குறித்த விவரம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. தடய பொருளை கைப்பற்றிய பிறகு வழக்கு பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், கைப்பற்றுதல் மகசரில் குற்ற

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:34:03 +0530

எண் குறிப்பிட்டுள்ளது. எனவே மேற்படி சாட்சிகளில் இருந்து எழும் சந்தேகத்தின் பலனை அளித்து எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் :**

கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட காவலர்கள் **அ.சா.1 திரு.வெங்கடேசன், அ.சா.2 திரு. கோபிகண்ணன்** அவர்களது சாட்சியத்தில் கடந்த 07.12.2024 பகல் 12 மணியளவில் ரோஷணை காவல் நிலையத்தில் அ.சா.1 தலைமை காவலராகவும், அ.சா.2 முதல் நிலை காவலராகவும் பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் கஜேந்திரன் உடன் சலவாதியில் உள்ள பாலாஜி நகருக்கு ரோந்து பணிக்கு சென்றபோது சந்தேகமாக இரண்டு நபர்கள் நின்றதாகவும், போலீசாரை கண்டவுடன் ஒரு நபர் ஓடிவிட்டதாகவும், மற்றொரு நபர் கையில் சீட்டுடன் இருந்தார் எனவும், அந்த நபரை விசாரித்த போது அவர் பெயர் சிவப்பிரகாஷ் மற்றும் முகவரியை சொன்னார் எனவும், அவரை சோதனை செய்து பார்த்தபோது குயில் 13, மயில் 12 லாட்டரி சீட்டுகள், ஒப்போ செல்போன் -1, ஒப்போ செல்போன் -1 இருந்ததாகவும், உதவி ஆய்வாளர் பகல் 12 20 மணிக்கு காரணம் கூறி எதிரியை கைது செய்து தடய பொருட்களை மகசரில் கைப்பற்றினார் எனவும், அதில் அ.சா.1, அ.சா.2 ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் க குறிப்பிட்டுள்ளனர்.

13. அ.சா.1 குறுக்கு விசாரணையில் லாட்டரி சீட்டுகள் எவ்வளவு ரூபாய் லாட்டரி

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:34:09 +0530

சீட்டு, பரிசு தொகை எழுதவில்லை எனவும், எந்த மாநில சீட்டு என எழுதவில்லை எனவும், சம்பவ இடத்தை சுற்றி 20, 30 வீடுகள் உள்ளதாகவும், விளையாட்டு மைதானம் வாட்டர் கம்பெனி உள்ளதாகவும், சம்பவ இடம் ஆட்கள் இருக்கும் இடம் எனவும், மதிய நேரம் என்பதால் மக்கள் நடமாட்டம் இல்லை எனவும், சம்பவ இடத்தில் புகைப்படம் எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

14. அ.சா.2 குறுக்கு விசாரணையில் லாட்டரி சீட்டுகளை தான் பார்த்ததாகவும், அதில் பரிசு தொகை, எந்த மாநில சீட்டு என எழுதவில்லை எனவும், பொதுமக்கள் வந்து சென்று கொண்டு இருந்தார்கள் எனவும், யாரும் சாட்சியாக இருக்க முன் வரவில்லை எனவும், சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் எனவும், 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் முன்னதாகவே 12.30 மணிக்கு எழுதப்பட்டுள்ளது எனவும், காவல் நிலையத்தில் அடுத்த குற்ற எண் கேட்டு எழுதியதாகவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவ இடத்தை சுற்றி 20, 30 வீடுகள் உள்ளதாகவும், விளையாட்டு மைதானம் வாட்டர் கம்பெனி உள்ளதாகவும், அங்குள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

15. விசாரணை அதிகாரி **அ.சா.3 திரு. கஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 07.12.2024 பகல் 12 மணியளவில் தனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி தானும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர் சலவாதி பாலாஜி நகர் ரோந்து பணிக்கு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:34:14 +0530

சென்றபோது இரண்டு நபர்கள் இருந்தார்கள் எனவும், அதில் ஒரு நபர் போலீசாரை கண்டவுடன் ஓடி விட்டதாகவும், மற்றொரு நபர் லாட்டரி சீட்டுகளை வைத்திருந்தார் எனவும், அவரை விசாரித்தபோது சிவப்பிரகாஷ் மற்றும் அவரது முகவரியை சொன்னார் எனவும், அந்த நபர் எதிரி எனவும், அவர் எதிரியை சோதனை செய்து பார்த்தபோது குயில் - 13, மயில் -12 லாட்டரி சீட்டுகள், ஒப்போ செல்போன் மற்றும் 2 செல்போன்கள் இருந்ததாகவும், அதை பற்றி விசாரித்த போது லாட்டரி சீட்டுகள் விற்பதாக எதிரி சொன்னதால் பகல் 12:20 மணிக்கு காரணம் கூறி எதிரியை கைது செய்து தடய பொருளை மகசரில் கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளார். எதிரி மற்றும் தடயத்துடன் வந்து நிலைய குற்ற எண். 562/2024 BNS சட்டப்பிரிவு 112 உடன இணைந்த 5, 7 (3) லாட்டரி Regulation Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், தடய பொருளை படிவம்- 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும், வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

16. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.3 எங்கிருந்து லாட்டரி சீட்டுகளை கைப்பற்றினேன் என்றால் எதிரியின் கையில் இருந்து கைப்பற்றியதாகவும், லாட்டரி சீட்டுகள் பரிசு தொகை, எந்த மாநிலம் என்பது குறித்து குறிப்பிடவில்லை எனவும், அந்நிய சாட்சிகளை விசாரிக்கவில்லை எனவும், சம்பவ இடத்தை சுற்றி 20, 30 வீடுகள் உள்ளதாகவும், விளையாட்டு மைதானம், வாட்டர் கம்பெனி உள்ளதாகவும் , அங்குள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை எனவும்,

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.06.18 06:34:20 +0530

அவர்கள் யாரும் முன் வரவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவ இடத்தை குறித்து மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை எனவும், 12:30 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்ததாகவும், 1 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், ஆனால் கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிடம் இருந்து லாட்டரி விற்ற பணம் கைப்பற்றப்படவில்லை எனவும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

17. கடந்த 07.12.2024 மதியம் 12 மணியளவில் சலவாதி கிராமம் பாலாஜி நகரில் எதிரி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெளிமாநில லாட்டரி சீட்டுகளை குழுவாக சேர்ந்து விற்பனை செய்தார் என்பது அரசு தரப்பு வழக்காகும். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் காவலர்கள். அ.சா.1, அ.சா.2 ஆகியோர் உதவி ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு சென்றதாகவும், கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளனர். எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார். போலீசார் சம்பவ இடத்துக்கு சென்றபோது எதிரியுடன் மற்றொரு நபர் நின்று கொண்டிருந்ததாகவும், போலீசாரை கண்டவுடன் ஓடியதாகவும் குறிப்பிட்டுள்ள நிலையில், அந்த நபர் குறித்து எந்த விவரமும் இறுதி அறிக்கையில் சொல்லவில்லை. எதிரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய பொருள் குயில், மயில் என எழுதப்பட்ட துண்டு வெள்ளை தாள்கள் ஆகும். அவை லாட்டரி சீட்டுகள் என்பதற்கு அரசு தரப்பில் எவ்வித

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:34:25 +0530

சாட்சியமும் முன்னிடப்படவில்லை. கைப்பற்றுதல் மகசர் தயாரித்த பிறகு வழக்கு பதிவு செய்ததாக சாட்சிகள் குறிப்பிட்டுள்ள நிலையில், கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது அரசு தரப்பு வழக்கு குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது. சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை. சம்பவ இடத்தை சுற்றி குடியிருப்புகள், வாட்டர் கம்பெனி உள்ளதாக அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் குறிப்பிட்டுள்ள நிலையில், அங்குள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. எனவே மேற்படி காரணங்களினால் எதிரி குழுவாக சேர்ந்து சட்டவிரோதமாக லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்தார் என்ற அரசு தரப்பு வழக்கு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5, அ.சா.பொ.1, அ.சா.பொ.2 வரையிலான சான்றாவணங்கள்படியாக எதிரி பிரிவுகள் 112 BNS r/w 5,7(3) Lottery Regulation Act ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**19. இறுதியாக, எதிரி பிரிவுகள் 112 BNS 5, 7(3) Lottery Regulation Act ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS - ன் கீழ் விடுதலை செய்து**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:34:31 +0530

**தீர்ப்பளிக்கப்படுகிறது.**

20. இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.33/2025 **அயிட்டம் 3 மற்றும் -4** ல் கண்டுள்ள OPPO A795G & POCO – 5 ஆகிய இரண்டு செல்போன்களை குற்றப்பல்வகை எண்.59/2025 அதன் உரிமையாளர் திரு.சிவப்பிரகாஷ் இடைக்காலமாக பெற்று சென்றுள்ளார். அதனை அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பின் பிணை முறிவு ஆவணம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி செல்போன்களுக்குரிய புகைப்படம் அ.சா.பொ.1, வழக்கு கோப்புடன் வைக்க உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்து எண்.33/2025 ல் கண்டுள்ள **அயிட்டம் -1** ல் குயில் என்று எழுதப்பட்ட லாட்டரி சீட்டு - 13, **அயிட்டம் -2** – ல் மயில் என்று எழுதப்பட்ட லாட்டரி சீட்டு - 12, ஆகியவை பயனற்றது என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜ ூன் திங்கள் 18 -ம் வியாழக்கிழமை 2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:34:37 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.வெங்கடேசன் தலைமை காவலர் 816 |
| அ.சா.2 | திரு.கோபிக்கண்ணன் தலைமை காவலர் 2255 |
| அ.சா.3 | திரு.கஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | ------- | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | ------- | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 07.12.2024 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | 07.12.2024 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 07.12.2024 | படிவம் - 95 (சி.பி.நெ.33/2025) | அ.சா.3 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:-

அ.சா.பொ - 1 இரண்டு சொல்போன்களுக்குரிய புகைப்படம்

அ.சா.பொ -2 லாட்டரி சீட்டுகள்

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.06.18 06:34:43 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.